# இயக்குனர் சங்கரின் திரைப்படங்களில் கதாநாயகனின் வகிபாகம்

**யூட் டினேஸ் கொடுதோர்**[101]

**ஆய்வுச் சுருக்கம்**

சினிமா என்பது ஒரு மிகப்பெரிய மக்கள் தொடர்பு சாதனம். திரைப்படக் கலையின் அளப்பெரிய ஆற்றல்களினால் வரலாறுகளையும், அறிவியல் உண்மைகளையும் காட்சி வடிவில் எளிதாகக் காண்பிக்க முடியும். திரைப்படம் என்பதில் அதன் கதை, திரைக்கதை வசனம், என்பதற்கும் அப்பால் கதாநாயகனின் தேர்வும் மிகவும் அவசியமான ஒன்று. அந்தவகையில் இயக்குனர் சங்கரின் திரைப்படங்களின் வெற்றியின் பின்னணியில் கதாநாயகன் எத்தகைய தாக்கத்தைச் செலுத்துகின்றான் என்பது இந்த ஆய்வின் மூலம் ஆராயப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் எல்லையாக இயக்குனர் சங்கர் இயக்கத்தில் வெளிவந்துள்ள 12 தமிழ்த் திரைப்படங்கள் அமைகின்றன. இந்த ஆய்வில் இயக்குனர் சங்கர் தெரிவு செய்யும் கதாநாயகர்களுக்கு இடையிலான ஒப்புமை, தனித்துவம் போன்றவற்றினையும், சங்கர் தமது கதாநாயகர் தெரிவில் மற்றைய இயக்குனர்களை விட எவ்வாறு வேறுபடுகின்றார் என்பதினையும் கண்டறிவது இவ் ஆய்வின் நோக்கமாக அமைந்திருந்தது. இயக்குனர் சங்கரின் திரைப்படங்களில் கதாநாயகர்கள் அவர்களின் தனித்திறமைக்கு ஏற்ற முறையிலே பல்வேறு கோணங்களில் அவரது படைப்புக்களில் பயன்படுத்தப்படுகிறார்கள். மேலும் திரைப்படத்தின் வெற்றியிலே திரைக்கதைக்கு ஏற்ற கதாநாயகன் தேர்வு முக்கியமான வகிபாகமாக அமைகின்றது என்பதே இந்த ஆய்வின் கருதுகோள்களாகும். இந்த ஆய்வின் மூலங்களாக இயக்குனர் சங்கர் இயக்கிய திரைப்படங்கள் அமைகின்றன. இந்த ஆய்வானது ஒப்பீட்டாய்வு, பகுப்பாய்வு மற்றும் விபரண ஆய்வு போன்ற ஆய்வு முறையியல்களைக் கைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு கதாநாயகனுக்கும் இடையிலான ஒப்புமை, தனித்துவம் போன்றவற்றினை கண்டறிவதற்கு ஒப்பீட்டாய்வு முறையும், இயக்குனர் சங்கரின் திரைப்படங்களுக்கும் அவரின் கதாநாயகர்களுக்கும் இடையிலான தொடர்பையும் அவர்களின் வகிபாகத்தினையும் கண்டறிய பகுப்பாய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் ஊடாக இயக்குனர் சங்கரின் கதாநாயகர்கள் சாதாரண குடிமகனாகக் காட்டப்பட்டாலும், அசாதாரண இயல்புகளைக் கொண்டவர்களாகவும், தானே தனித்து நின்று அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பவர்களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர் என்பது இந்த ஆய்வினூடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** இயக்குனர் சங்கர், திரைப்படம், கதாநாயகன்

## 1.0 ஆய்வறிமுகம்.

சினிமா என்பது ஓர் மிகப்பெரிய மக்கள் தொடர்பு சாதனம். திரைப்படக் கலையின் அளப்பெரிய ஆற்றல்களினால் வரலாறுகளையும், அறிவியல் உண்மைகளையும் காட்சி வடிவில் எளிதாகக் காண்பிக்க முடியும். திரைப்படம் என்பதில் அதன் கதை, திரைக்கதை வசனம், என்பதற்கும் அப்பால் கதாநாயகனின் தேர்வும் மிகவும் அவசியமான ஒன்று. அந்த வகையில் இயக்குனர் சங்கரின் திரைப்படங்களின் வெற்றியின் பின்னணியில் கதாநாயகன் எத்தகைய தாக்கத்தைச் செலுத்துகின்றான் என்பது இந்த ஆய்வின் மூலம் ஆராயப்பட்டுள்ளது.

### 1.1 இயக்குனர் சங்கர்.

இயக்குனர் சங்கர் ஓர் தமிழ் இயக்குனராக இருந்தாலும், உலகம் பூராக பிரபல்யமான ஓர் இயக்குனராக உள்ளார். மகிவும் சாதாரணமான தனது பயணத்தை ஆரம்பித்த சங்கர் இன்று மிகவும் பிரமாண்டமாக தனது திரைப்படங்களை எடுக்கும் அளவிற்கு உயர்ந்து காணப்படுகின்றார்.

ஒரு வரியில் அடங்கும் கதையை எடுத்து அதற்கு பெரிய களம் அமைத்து அதிக பொருட் செலவினை வழங்கி அது மக்கள் மத்தியில் இடம் பிடிக்கும் வகையில் பிரமாண்டமாக எடுப்பது இயக்குனர் சங்கரின் தனித்துவமான கலையாகும்.

To whom correspondence should be addressed: sdineshkodi@gmail.com

[101] Lecturer (Prob.), Media Studies, University of Jaffna.

**"இந்தியன் -**
**சுதந்திரப் போராட்ட தாத்தா ஊழலுக்கு எதிராக செயற்படுபவர்களை தண்டித்தால் / அழித்தால் என்னவாகும்?"**

இயக்குனர் சங்கர் 1990 களில் சினிமாத் துறையில் கால் பதித்தார், எஸ்.ஏ. சந்திரசேகரிடம் உதவி இயக்குனராக பணியினை ஆரம்பித்த சங்கர், 1993 ஆம் ஆண்டு "ஜென்டில்மேன்" என்ற வெற்றி படத்தினை இயக்கி தனது இயக்குனர் பயணத்தை ஆரம்பித்தார். இன்று வரை இவர் 12 திரைப்படங்களை இயக்கியுள்ளார். தனது படங்களில் அதிகமாக A.R. ரகுமான் அவர்களேயே இசையமைப்பாளராக கொண்டுள்ளார்.

உதவி இயக்குனராக தனது சினிமா வாழ்வை ஆரம்பித்து இயக்குனர், தயாரிப்பாளர் எழுத்தாளர், நடிகர், கவிஞர் என பல கோணங்களில் தனது அடையாளத்தினை பதித்துள்ளார்.

### 1.2 கதாநாயகன்

இன்று தமிழ் சினிமாவில் ஏராளமான நடிகர்கள் (முக்கியமாக கதாநாயகர்கள்) தோற்றம் கண்டுள்ளனர். இவ்வாறு ஏராளமான கதாநாயகர்கள் தோற்றம் கண்டாலும் அவர்களினால் பல காலம் நிலைத்து நிற்க முடியவில்லை. அதே சமயம் ஒரு சில கதாநாயகர்கள் தமது சினிமா பயணத்தை ஆரம்பித்து பல விருதுகளை பெற்று பல கோடி மக்களை தமது இரசிகர்களாக கொண்டு காணப்படுகின்றனர்.

கதாநாயகன் அழகாய் மாத்திரம் இருந்தால் போதாது சிறப்பாக நடிக்கவும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். கதாநாயகன் என்பவன் அழகானவனாய், திறமையானவனாய், கலையார்வம் கொண்டவனாய், தனக்கு கொடுக்கப்படும் பாத்திரங்களை ஏற்று நடிக்கக் கூடியவனாய் இருத்தல் வேண்டும் இவ்வாறு இருக்கும் கதாநாயகர்களே சினிமா துறையில் நிலைத்து நிற்பார்கள்.

அதிகமான தமிழ் திரைப்படங்களின் அடிக்கருத்துக்கள் கதாநாயகர்களினாலே வெளிப்படுத்தப்படுகின்றது. ஓர் திரைப்படத்தில் கதாநாயகர்களின் வகிபாகம் என்பது முக்கியமான ஒன்று.

### 1.3 இயக்குனர் சங்கரும் கதாநாயகர்களும்.

இயக்குனர் சங்கர் இன்று ஒரு வெற்றி இயக்குனராக இருப்பதற்கு காரணங்களாக அமைவனவற்றுள் ஒன்றாக, அவரின் கதாநாயகர்களின் தெரிவு அமைந்துள்ளது. இவர் கதாநாயகர்களை ஓர் ஆழமான ஆய்வின் பின்னரே தெரிவு செய்கின்றார். அவ்வாறு தெரிவு செய்வதினால் கதாநாயகர்கள் இயக்குனரின் கதைக்கு ஏற்றால் போல் தமது பாத்திரத்தினை அமைத்து திரைப்படம் வெற்றி பெற துணை புரிகின்றனர்.

- இந்தியன் - கமல் இந்திய தாத்தா
- அந்நியன் - விக்ரம் - அம்பி, ரெமோ, அந்நியன்
- எந்திரன் - ரஜினி – எந்திரன்

### 1.4 இயக்குனர் சங்கர் கதாநாயகர்களினை வெளிப்படுத்தம் விதம்

இயக்குனர் சங்கர் கதா நாயகர்களினை அவரின் திரைப்படங்களில் பல்வேறு விதங்களாக, மாறுபட்ட தோற்றம் கொண்டவர்களாக வெளிப்படுத்தியுள்ளார். இயக்குனர் தனது திரைப்படங்களில் கதா நாயகர்களுக்கு அதிக முக்கியத்தும் கொடுத்திருப்பதினை நன்கு அவதானிக்கலாம்.

**1.4.1 கதாநாயகன் அறிமுகம்.**

இயக்குனர் சங்கரின் கதாநாயகர்கள் சாதனையாளர்களாக திரைப்படங்களில் காண்பித்தாலும் அவர்களின் வருகை சாதாரணமான ஒன்றாகவே காட்டுவதை நாம் அவதானிக்க முடியும்.

கதாநாயகர்களின் சாகசங்களை மிகவும் தத்துருவமாகக் காட்டும் இயக்குனர், கதாநாயகர்களின் வருகையை மட்டும் மிகவும் சாதாரணமாக காட்டுவதும் அவரது திரைப்பட இயக்கத்தின் உத்தியாகவும் இருக்கலாம்.

***முதல்வன் :***

***ஆரம்பத்திலே ஓர் முதல்வராகக் காட்டி பரபரப்பினை ஏற்படுத்தாது ஓர் சாதாரண தொலைக்காட்சி ஊடகவியலாளராக காட்டி சாதாரண மனிதனாகவே அவரின் வருகை காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.***

**1.4.2 நாயகனின் குடும்பப் பின்னணி**

இயக்குனரின் திரைப்படங்களினை அவதானிக்கும் போது அவர் சில உத்திகளையே அனைத்துப்படங்களிலும் வெளிப்படுத்தியிருப்பதினை அவதானிக்க முடியும்.

இயக்குனர் தமது கதாநாயகர்களை சிறப்பாக காட்ட முயல்வதினால் குடும்பம் கதாநாயகன் மேல் அதிக நம்பிக்கை, மரியாதை, பாசம், கொண்டதாக காட்டுகின்றார். நாயகரின் குடும்பம் ஓர் நடுத்தர குடும்பமானதாகவும். அதிக பாசப்பிணைப்பு கொண்டதாகவும் காட்டல்.

**காதலன் -**

**மகனில் அதிக பாசம் கொண்ட வறுமையால் வாடும் குடும்பம்.**

**அந்நியன்-**

**பக்தி நிறைந்த ஒரு சாதாரணமான குடும்பம் மகன் மீது அதிக மரியாதை கொண்டது.**

**1.4.3 கதாநாயகனின் தொழில்**

இயக்குனர் சங்கர் தனது கதாநாயகனை வலிமையற்றவனாகவும், வறுமையில் வாடுபவனாகவும் அறிமுகப்படுத்தி பின்னர் ஓர் சாகச நாயகனாக கடினமான விடயங்களை சாதாரணமாக செய்பவனாக காட்டுகின்றார்.

கதாநாயகர்கள் சாதனையாளர்களாக திரைப்படங்களில் வெளிப்படுத்தினாலும் அவர்களின் வருகை சாதாரணமான ஒன்றாக அமைவது போல் அவர்களின் தொழிலும் சாதாரனமானதாகவே அமைகின்றது.

**இந்தியன் :-**

**70 வயது இந்தியத் தாத்தா போக்கிரிகளுக்கும். வில்லன்களுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் சாகசம் புரிந்து வீரனாக காட்டும் தாத்தா ஓர் விவசாயி.**

**ஜென்டில் மேன் :-**

**அப்பளக்கடை முதலாளி**

**1.4.4. நாயகனுக்கான சவால்களும் சாதனைகளும்.**

ஒரு சாதாரணமான மனிதனாக இருந்து கொண்டு சாதனைகள் புரியும் கதாநாயகனை எதிர் அணி பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு எதிர்ப்பதாகவும் அதனை நாயகன் தனித்து நின்று எதிர்த்து அதில் வெற்றி கண்டு தன்னை வெளிப்படுத்துவதுமாக காட்டப்படுகின்றது.

எதற்கும் அஞ்சாமல் சமூக நலனுக்காக போராடும் கதாநாயகன்

**முதல்வன் :-**

**ஒரு முதல்வரை பகைத்து ஓர் சாதாரண ஊடகவியலாளர் சாதனை புரியும் சாட்சி.**

**எந்திரன் :-**

**அதீத சக்தி வாய்ந்த இயந்திரத்தை தடுத்து நிறுத்தல்.**

**1.4.5 கதாநாயகனும் காதலும்**

இயக்குனர் சங்கர் காதல் சார்ந்த விடயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காவிட்டாலும், ஓரளவு முக்கியத்துவம் கொடுப்பதினை அவதானிக்க முடிகின்றது. இயக்குனரின் அனைத்துப்படங்களிலும் காதல் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இயக்குனரின் காதல் காட்சிகளில் கதாநாயகன் ஒரே பாணியினை கொண்டவனாகவே சித்திரிக்கப்படுகின்றார். சங்கரின் கதாநாயகர்கள் சமூகப்பணி, சாகசம், சாதனை என்று ஈடுபடுதலினால் அவர்களுக்கு காதலிக்க நேரம் கிடைப்பதில்லை இதனால் கதாநாயகியே கதாநாயகனை துரத்தி துரத்தி காதலிப்பதாக அமைகின்றது.

**எந்திரன் :-**

**கதாநாயகன் ஒரு விஞ்ஞானி, காதலி அவரை பின் தொடர்ந்து காதலித்தல்.**

**1.4.6 கதா நாயகர்களும் பாடல் காட்சிகளும்.**

இயக்குனர் சங்கரின் பாடல் காட்சிகளில் வரும் கதாநாயகன் ஓர் பாரிய அரச மாளிகையில் வசிக்கும் அரசனாகவும் உயர் அதிகாரியாகவும், புதுமையான தோற்றம் கொண்டவராகவும், அழகான முகப்பொலிவும், கவரும் வண்ணம் ஆடை அணிந்தும் தோற்றம் பெறுவதினால் கதாநாயகனை ஏனையோரை விட வேறுபடுத்தி காட்டுவதினை அவதானிக்க முடியும்.

**1.4.7 கதா நாயகனின் அதிரடி வசனங்கள்.**

குறைவாகப் பேசி நிறைவான கருத்தை கூறும் சிறப்பு சங்கருக்குரியது அதிகமான கதை வசனங்களை உள்ளடக்காமல் சொற்ப வசனங்களில் விளக்க முற்படுதல், செய்து காட்டுதல் சங்கரின் தனித்துவம்.

எதை, எங்கு, எப்படி, கூறவேண்டுமோ அதை அங்கே, அப்படியே, அழகாய், தெளிவாய் கதாநாயகர்கள் கூறுவார்கள். அதிரடி வசனம் சிந்திக்கத் தக்கதும் மொழியமைப்பு கவரும் சொற்பதம் போன்றன கதாநாயகர்களினை இன்றும் அதிகமாக முக்கியத்துவப் படுத்துகின்றன.

**நண்பன்** - **"All is well"**

**1.4.7 நாயகனின் பன்முக ஆற்றல்.**

இயக்குனர் சங்கரின் திரைப்படங்களில் வரும் கதாநாயகர்கள் திறமைகளை சிறப்பாக வெளிக்கொணர்ந்து சாதனை புரிபவர்களாகவும், பன்முக ஆற்றல் கொண்டவர்களாகவும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பல்துறைசார் செயல்களினை செய்பவர்களாகவும் காட்டல்.

**நண்பன் :**

**கல்வி, விளையாட்டு, கலகலப்பு, சண்டை இடும் ஆற்றல். கவிதை எழுதும் திறன் என்று பல்வேறு ஆற்றல்கள்.**

**1.5 தமிழ் இயக்குனர்களும் - தமிழ் கதாநாயகர்களும்.**

ஏனைய தமிழ் சினிமா இயக்குனர்களினை விட இயக்குனர் சங்கர் கதாநாயகர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதினை அவதானிக்க முடியும்.

கதாநாயகன் பிரபல்யமானவனாகவும், சிறப்பாக நடிப்பினை வெளிப்படுத்துபவனாகவும் தனது படத்தினை வெற்றி பாதையால் இட்டுச் செல்பவனாகவும் தெரிவு செய்கின்றார்.

இதுவரை அவர் ஐந்து கதாநாயகர்களை மாத்திரம் தனது கதாநாயகனாக கொண்டு தனது 12 படங்களினையும் எடுத்துள்ளார். தனித்து எதையும் செய்யக் கூடியவர்கள். பொது விடயங்களில் ஆர்வம் கொண்டவர்கள் அதிக ரசிகர்களினை கொண்டவர்கள்.

**1.6 முடிவுரை**

இயக்குனர் சங்கர் தனது திரைப்படங்களில் கதாநாயகர்களினை தெரிவும் செய்வதிலே தனக்கெனத் தனித்துவமான பாணியைக் கையாளுகின்றார். அவரது படைப்புக்களில் வருகின்ற நாயகர்கள் சாதாரண குடிமக்களாக காட்டப்பட்டு அதே வேளை அசாதாரண இயல்புகளை கொண்டவனாகவும் அதிக வலிமை கொண்டவனாகவும், தானே தனித்து நின்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்பவனாகவுமே சித்திரிக்கப்படுகின்றான்.

அந்த வகையில் நோக்கும் போது சங்கரின் கதாநாயகர்கள் ஏனைய நாயகர்களினை விட வேறுபடுகின்றனர் சுருங்கக் கூறின் சங்கரின் திரைப்படங்கள் எத்தகைய பிரமாண்டமாக இருக்கின்றதோ அந்த பிரமாண்டத்துக்கு அதிக துணை புரிகின்றவர்களும் திரைப்படத்தில வெற்றியினை தீர்மானிப்பவர்களாகவும் அக்கதையின் கதாநாயகர்கள் உள்ளனர்.

**துணை நின்றவை**


1. சுஜாதா, <u>கற்றதும் பெற்றதும்,</u> 75 விகடன் பிரசுரம், ஆனந்த விகடன், சென்னை.
2. குமரன்தாஸ், 2008, <u>தமிழ்த் திரையின் நிழல் அரசியலும் நிழல் அரசியலும்,</u> தோழன் வெளியீடு, சென்னை.
3. ஜெகதா,2004, <u>காலத்தை வென்ற திரைப்படங்கள்,</u> ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை.
4. கோவிந்தன்.க,1999, <u>ஆய்வாளர் பார்வையில் திரைப்படக் கலை,</u> குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
5. கல்யாணராம்.தி, சங்கர்.எஸ்.கே, 1991, <u>உலக சினிமா சாதனையாளர்கள்</u> - 3, சலனம் இதழ்.3, டிசம்பர்.
6. கார்த்திகேயன் . கி, 2012, <u>இன்றைய ஊடகங்களின் செயற்பாடும் கடமைகளும்,</u> மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
7. பிரபாகர். இரா, 2003, <u>சினிமா ஓர் அறிமுகம்,</u> கனவுப்பட்டறை பிளாஸா சென்டர், சென்னை.
8. திருநாவுக்கரசு. ப, 2004, <u>சொல்லப்படாத சினிமா</u>, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
9. அறந்தை நாராயணன், 1981, <u>தமிழ் சினிமாவின் கதை,</u> நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.